**தலைப்பு 101 - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு - 2024**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 101 – புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 யூலை 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் பெறுமதி ரூபா (21,339,070) ஆக இருக்க வேண்டிய போதிலும் ரூபா (22,977,221) ஆக ரூபா 1,638,151 குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 1,638,152 கட்டுநிதி மீதியொன்று காணப்பட்ட போதிலும் அந்தப் பெறுமதிக்குரிய காசு மீதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வேறுபாட்டிற்கான காரணமாக ரூபா 1,638,151 தீர்த்துவைக்கப்படாத கட்டுநிதி மீதியாக காண்பிக்கப்பட்ட போதும் அது நடைமுறைப் பொறுப்புக்களாக இருந்தமையால் உரிய நிதி நிலைமைக்கூற்றில் நடை முறைப் பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2024 திசம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 06/2024 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.9 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரிக்கு தேறிய சொத்துக்களின் பெறுமதி கணிப்பீடு செய்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சிற்குச் சொந்தமாகக் காணப்பட்ட 06 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அத் திகதியில் அமைச்சிற்கு உரித்தற்ற ரூபா 12,300,000 பெறுமதியுடைய 03 வாகனங்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | உரிய 06 வாகனங்களில் ஒன்று தற்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கலாசார நிலைங்களில் உள்ள வாகனங்களில் ஒரு வாகனம் பழுதுபார்க்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் மேலும் இரண்டு வாகனங்களை விற்றுத் தீர்க்க வேண்டியதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தேசிய புலமைச் சொத்துப் பிரிவிற்குரிய ஏனைய வாகனங்கள் இரண்டிற்குமுரிய விளக்கமளித்தல்கள் பின்னர் சமர்ப்பிக்கப்படுவதாகும் அறிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சிற்குரியதாக காணப்படுகின்ற வாகனங்களைக் கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் உரித்து கையேற்கப் படாத வாகனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### (ஆ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச்செல்லப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும், நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| **(i) பிணைப் பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | பிணைப் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைப் பதிவேடு நாளதுவரை யாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**(ii) விடுமுறைப் பதிவேடு**

| | | |
|---|---|---|
| தாபனவிதிக்கோவையின் XII அத்தியாயத்தின் 1.7 இன் பிரகாரம் விடுமுறைப் பதிவேடு பேணிச் செல்லப் பட்டிருக்க வில்லை. | விடுமுறைப் பதிவேட்டை நாளதுவரையாக பேணிச் செல்வற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட் டுள்ளது. | தாபன விதிக்கோவை யின் XII அத்தியாயத்தின் 1.7 இன் பிரகாரம் 190 பொதுப் படிவ பத்திரத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகள் குறிப்பிடுவதற்காக விடுமுறைப் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **உரிய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** | **அமுல்படுத்தப்படாத பரிந்துரைகள்** | **இந்த அறிக்கையுடனான தொடர்பு** |
|---|---|---|
| 1.6.1(ஆ) | அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 02 வாகனங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 1.6.2(அ) |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | ஒரு மீண்டெழும் செலவின விடயம் மற்றும் மூலதன செலவின விடயத்திற்காக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்ட கூட்டு மொத்தமாக ரூபா 8,151,912 ஆன நிதி | கடந்த ஆண்டில் தொர்ச்சியாக எரிபொருள் விலை உயர்வடைந்து சென்றதன் காரணமாக 101-1-2-0-1202-2 செலவின விடயத்திற்கு நிதி ஏற்பாடு மாற்றப்பட்ட போதிலும் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் எரிபொருள் விலை உயர் | சரியாக ஆய்வினை மேற்கொண்டு நிதி ஏற்பாடுகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடுகளில் ரூபா 5,352,809 சேமிக்கப்பட் டதுடன் அந்த சேமிப்பு நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றல்களை சதவீதமாக 65 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையிலான வீச்சினைக் கெண்டிருந்தது. | வடையாமை மற்றும் செலவின முகாமைத்துவத் தினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்ட தாகவும் மூலதன செலவின விடயமான 101-02-05-0-2102 இற்காக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் நிதி ஏற்பாடு மாற்றுதல் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ஆன மையால் உரிய பணிகளை மேற்கொள்வதற்கு உரிய அளவிலான காலம் மாவட்ட செயலாளருக்கு காணப்படா திருந்ததாக அவதானிக்கப் பட்டமையால் நிதி ஏற்பாட்டை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. | |
| (ஆ) | மீண்டெழும் செலவின விடயத்திற்காக ரூபா 1,100,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 600,000 தொகை நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்ட துடன் எஞ்சியிருந்த நிதி ஏற்பாடு தொகையும் உரிய நோக்கங்களுக்காக செலவிடப் பட்டிருக்கவில்லை. | அமைச்சு செயலாளர் 2024 மீண்டெழும் செலவின கட்டுப்படுத் துவதற்கு உரிய கடிதத்தின் பிரகாரம் இந்த செலவின விடயத்தின் கீழான நிதி ஏற்பாட்டில் நிறுத்திவைக்கப்பட்ட அளவு ரூபா 500,000 ஆக இருந்த துடன் 101-02-05-0-1304 செலவின விடயத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் மேற் கொள்ள முடியாதிருந்ததன் அடிப்படையில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த சேமிப்பு நிதி ஏற்பாடு, பிரதேச கலாசார நிலையங்களின் உத்தியோகத்தர்களின் பிரயாண செலவினங்களை செலுத்துதல் மற்றும் பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்படுகின்ற பொருள் மெய்மை ஆய்வு நடவடிக்கைக களுக்குரிய பிரயாண செலவினங் களைச் செலுத்துவதற்கு 101-2-05-0-1101 செலவின விடயத்திற்கு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. | நிதி ஏற்பாடு செய்யப்பட்ட தொகை, ஆண்டில் நிதி பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக் காக பயன்படுத் துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மூலதன செலவின விடயங்கள் இரண்டிற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் மாற்றப்பட்ட ரூபா 41,541,657 கூட்டுத் தொகையான நிதி ஏற்பாடுகளில் ரூபா 26,771,010 சேமிக்கப்பட்டதுடன் அந்த சேமிப்பு தேறிய நிதிபாட்டின் சதவீதமாக 55 சதவீதம் முதல் 69 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | மூலதன செலவின விடயமான 101-02-05-37-2104 இற்காக ரூபா 33,690,000 நிதி ஏற்பாடு குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டதுடன் மொத்த நிதி ஏற்பாடு ரூபா 38,690,000 மற்றும் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாடு ரூபா 21,339,053 ஆக இருந்ததுடன் டபிள்யூ.டீ. அமரதேவ அசப்புவ நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சில கொள்வனவுகளுக்காக பல தடவைகள் பெறுகை நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டமையும் மற்றும் சில வழங்குநர்கள் உரிய பொருட்கள் நிர்மாண கட்டிடத்திற்கு கையளிப்பதற்கு நீண்ட காலம் எடுத்ததன் காரணமாக நிதி ஏற்பாடு குறித் துரைத்த கால எல்லையில் பயன் படுத்துதல் வரையறுக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு உரிய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | ஆரம்ப மதிப்பீடு நிதி ஏற்பாடு இன்றி மூலதன செலவின விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலமும் ரூபா 5,037,326 நிதி ஏற்பாடு பெறப்பட்டு ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | 101-2-5-49-2509 மத்திய கலாசார நிதியத்திற்காக ஒதுக்கப்பட்ட செலவின விடயத்திற்காகவும் ரங்கிரி-தம்புழு விகாரையின் பாதுகாப்பு பணிகளுக்காக விஷேட மானியமாக கிடைக்கப்பெற்ற ரூபா 5,037,326 நிதி ஏற்பாட்டிற்காக இந்த செலவின விடயம் ஸ்தாபிக்கப்பட்ட போதும் அந்த செயற்திட்டப் பணிகளுக்காக மத்திய கலாசார நிதியத்தால் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமையின் அடிப்படையில் தேசிய மரபுரிமை பிரிவினால் கட்டுநிதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதி ருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மத்திய கலாசார நிதியத்திற்கு நிதி ஏற்பாட்டை வழங்கி உரிய விஷேட மானியம் வழங்கிய நோக் கத்திற்காக நிதியினைப் பயன்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நாற்பது (40) மீண்டெழும் செலவின விடயத்திற்கான நிதி ஏற்பாடு கூட்டுமொத்தமான ரூபா 167,060,000 ஆன தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 95,495,612 சேமிக்கப்பட்டதுடன் அந்த சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 30 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் சமர்ப்பிக்கப்படாமை, செலவினக் கட்டுப்பாடு மற்றும் நிதி முகாமைத்துவம் மற்றும் சிக்கனமாக பயன்படுத்துதல் மற்றும் முன்னுரிமை வழங்க வேண்டிய தேவையான செலவினங்கள் மாத்திரம் செய்யப் பட்டதன் காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட் டுள்ளது. | சரியான நிதி முகாமைத்துவம் மற்றும் சிக்கனமாக பயன்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி உரிய ஆய்வினை மேற்கொண்டு மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | எட்டு (08) மூலதன செலவின விடயங்ளுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 160,700,000 ஆன தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 137,405,940 சேமிக்கப்பட்டதுடன் அந்த சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் வீதமாக 30 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | தஹம்பாய கட்டிடத்தின் கூரையின் அடிப்படையில் சூரிய வலுச் சக்தி முறைமையைப் பொருத்துவதற்காக உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தாமதமடைந்தமை, அமைச்சின் கீழ் உள்ள சகல திணைக்களங் களுக்காகவும் நிதி எற்பாடு ஒதுக்கப்பட்டமையும் உரிய திணைக்களத்தின் மூலம் நிதி ஏற்பாடு கோரிக்கை சமர்ப்பிக்கப் படாதிருந்தமையால் செலவினக் கட்டுப்பாட்டு சுற்றறிக்கையைப் பின்பற்றியமை, இலக்கிடப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை, கட்டிடத் திணைக்களத்திற்கு நிதிப் பிரமாணம் 208 இன் மூலம் நிதி ஏற்பாடு கையளிக்கப்பட்ட போதும் செலவினங்கள் அறிக்கையிடப்ப டாமை, திட்டமிடப்பட்ட பிரகாரம் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்ட போதும் அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் வதிவிட ரீதியில் மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் செலவினங்கள் வரையறுத்தமை, தொழில்நுட்ப பிரச்சினைகள் போன்ற காரணங் கள் அடிப்படையில் சேமிக்கப்பட்ட தாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு உரிய நிகழ்ச்சித்திட்டங்களு க்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (எ) | பத்து (10) மீண்டெழும் செலவின விடயத்திற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டு மொத்தமான ரூபா 7,140,000 மற்றும் மூன்று (03) மூலதன செலவின விடயங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 1,002,200 ஆன ஒட்டுமொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டி ருந்தது. | தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் பிரகாரம் செலவினங்களை கட்டுப்படுத்துதல், எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் தேவைகள் எழாதிருந்தமை, வெளிநாட்டுப் பிரயாண செலவி னங்கள் தொடர்பாக சனாதிபதி அலுவலகத்தின் மூலம் அறிவிக்கப் பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமையால் இந்த செலவின விடயங்களில் நிதி முகாமைத்துவம், சிக்கனமாக பயன் படுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை, இந்த செலவின விடயத்திற்குரிய நிதி ஏற்பாடு அமரதேவ அழகியற் கலை மற்றும் ஆராய்ச்சி நிலைய (அமரதேவ அசப்புவ) செயற் திட்டத்தின் பராமரிப்பு மற்றும் செயற்பாடு செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதும் அந்த செலவினங்கள் மேற்கொள்ளப் | ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு உரிய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

படாமை போன்ற காரணங்கள் காண்பிக்கப்பட்டிருந்தது.

**3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சிற்குரிய மூலதன செலவின விடயம் இரண்டிற்காக ஏனைய திணைக்களங்கள் இரண்டின் மூலம் (செலவினத் தலைப்பு இலக்கம் 258 மற்றும் 265) கூட்டுமொத்தமாக ரூபா 84,560 ஆன ஐந்து பொறுப்புக்கள் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் அமைச்சின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப் பட்டிருந்தது. | அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் இந்த தொகை பொறுப்பாக உள்ளடக்கப் படாதிருந்ததுடன் ஏனைய செலவினத் தலைப்பு இரண்டினால் இந்த செலவின விடயங்களுக்காக பொறுப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. உரிய செலவினத் தலைப்புக்களில் விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் பதிலளிக் கப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக் களில் சரியான தகவல்களை உள்ளடக்குதல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 211(i) மற்றும் நிதிப்பிரமாணம் 447 இன் பிரகாரம் சகல பொறுப்புக்களும் அவை ஏற்பட்டவுடன் பொறுப்புப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் போது அமைச்சின் 26 கொடுப்பனவு உறுதிச்சீட்டிற்குரியதாக செலுத்தப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 3,541,342 தொகை 2025 ஆம் ஆண்டின் ஆரம்ப 03 மாதங்களின் போது செலுத்தப் பட்டிருந்த போதிலும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் பொறுப்புக்களாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் புதிய சிகாஸ் இணையத்திற்கு 2025.01.31 அல்லது அதற்கு முன் தரவேற்றம் செய்ய வேண்டியிருந்தமையால் பொறுப்புப் பதிவேட்டில் அத்திகதியில் உள்ள பொறுப்பு மீதி மாத்திரமே உள்ளடக் கப்பட்டதாகவும் 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சகல கடப்பாடுகள் மற்றும் பொறுப் புக்கள், பொறுப்புக்கள் பதிவேட்டில் சரியாக குறிப்பிடு வதற்கு நடவடிக்கை எடுப்பதா கவும் அறிவிக் கப்பட்டுள்ளது. | சகல கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்.**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | அமைச்சின் நிதிக் கட்டுப் பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை யொன்றை தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும், கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த துடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற் கொள்ளப்பட்ட மீளாய்வினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமானதாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற் கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அந்த மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் படவேண்டியிருந்த போதும் அவ்வாறான மீளாய்வொன்று மேற் கொள்ளப்பட்டமைக்கான வெளிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது உரிய மீளாய்வினை எழுத்து மூலம் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | உள்ளகக் கணக்காய்வு இலக்கினை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்க பூர்வமானத் திட்ட முறைமை யொன்று உள்ளமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 5.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் இந்தத் தேவை நிறைவேற்றப்பட் | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் 2024 இன் நான்காவது காலாண்டின் போது பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்ட துடன் அவ்வப்போது அமைச்சிற்குரிய நிறுவனங் கள் மாற்றப்பட்டதன் காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு முடியாதிருந்த | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | டிருக்கவில்லை. | மையும் 2025 சனவரி மாதத்தின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் இந்த நிலைமை தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |

3.4 **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | அவதானிப்பு பெறுமதி - ரூபா | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| அரச நிருவாக சுற்றறிக்கை | | | | |
| 2016 திசம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 என்ற சுற்றறிக்கையின் | | | | |
| * 3.1 ஆம் பிரிவு | - | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாதத்தின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது எஞ்ஜின் தொடர்பாக பிரதான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இதில் எந்தக் காரணங்கள் முதலாவது நிகழ்கின்றதோ அந்த சந்தர்ப்பத்தின் பின்னர் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியருந்த போதிலும் அமைச்சிற்குரிய 44 | 2024 ஆம் ஆண்டிற்காக சகல வாகனங்களுக்காகவும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் (வெளித் தரப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட 05 வாகனங்கள் தவிர) 2025 ஆம் ஆண்டிற்காக எரி பொருள் | அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்கள் தொடர்பாக கணக்காய்வுத் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | பரிசோதனை மேற் கொள்வற்கு திட்டமிடப்பட்டுள் ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது . | |
| * 3.3 ஆம் - பிரிவு | எரிபொருள் பயன்பாட்டில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அதனை இனங்காண்தற்காக சுற்றிக்கையின் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் போக்குவரத்து சேவை குறிப்புக்கள் மாதாந்தம் பூர்த்தி செய்ய வேண்டி யிருந்த போதிலும் அமைச்சிற்குரிய 26 வாகனங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது புத்தசாசன பிரிவிற்குரிய 26 வாகனங்களுக்காக மாதாந்தப் போக்குவரத்து சேவைக் குறிப்புக்கள் பூர்த்தி செய்து பேணிச்செல்லப்படு வதாக அறிவிக்கப் பட்டுள்ளது. | அரச நிருவாக சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அமைச்சின் பொது வைப்புக் கணக்கு 03 இற்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 56,304,096 ஆன காலாவதியான வைப்புத் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சார்க் கலாசார நிலையம் நிர்மாணித்தல் நடவடிக்கை தொடர்பாக இறுதித் தீர்மானம் இதுவரை எடுக்கப்படாதிருந்தமையால் சார்க் கலாசார நிலையத்தை நிர்மாணிப் பதற்குரிய நிறுத்தி வைப்புக்களும், அமரதேவ அசப்புவ நிர்மாண நடவடிக்கை கள் இதுவரையில் தற்போது மேற் கொள்ளப்படுகின்றமையாலும் அதற்குரிய நிறுத்தி வைத்தல் வைப்பும் 6000-0-0-16-0-73 (ஒப்பந்தங்களுக்கான நிறுத்தி வைத்தல்) பொது வைப்புக் கணக்கில் காலாவதியான வைப்பு மீதியும் வேலைகள் பூர்த்தி செய்யப் படாதிருந்த வித்தியாலங்கார பிரிவெனாவின் புதிய கட்டிடம் நிர்மாணிப்பதற்குரிய நிறுத்தி வைத்தல் தொகையும் விடுவிக்க முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 வங்கி கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2019 டிசம்பர் 31 ஆந் திகதி இலக்கம் 09/2019 என்ற வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் | அமைச்சின், கலாசார அலுவலக்கள் பிரிவிற்கும் உரிய 7040782 ஆம் இலக்க உத்தியோகபூர்வ வங்கிக் | உரிய அங்கீகாரத் தைப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டி |

| | | |
|---|---|---|
| அமைச்சிற்காக 209 கட்டுநிதிக் கணக்கு இலக்கங்களும் கணக்கு இலக்கம் 7040101 என்ற இலங்கை வங்கியின் உத்தியோகபூர்வ கணக்கு இலக்கம் மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டி ருக்கும் போது அதற்கு மேலதிகமாக அமைச்சினால் கணக்கு இலக்கம் 7040782 மற்றும் கணக்கு இலக்கம் 7040115 என்ற வங்கிக் கணக்குகள் இரண்டிற்கும் பிரதான கணக்கில் இருந்து அவ்வப் போது பணம் மாற்றப்பட்டிருந்தது. உப அலுவலகங்களுக்காக உத்தியோகபூர்வ வங்கி கணக்கு திறப்பதற்காக திறைசேரி செயற்பா டுகள் பணிப்பாளர் நாயகத்தின் 2015 ஒக்டோர் 23 ஆந் திகதிய திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கை இலக்கம் 03/2015 இன் 02.1 இன் பிரகாரம் பெறப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படா மையின் காரணமாக அமைச்சிக்கான உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கில் இருந்து ஏனைய வங்கிக் கணக்குகளுக்காக பணம் மாற்றுதல் சட்ட ரீதியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கணக்கு 2015 ஆம் ஆண்டின் மார்ச் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு கலாசார அலுவலக்கள் பிரிவின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்காக பேணிச் செல்லப்பட்டு 2015 ஒக்டோபர் 23 ஆந் திகதி விநியோகிக் கப்பட்ட 03/2015 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரியின் கீழ் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத் தின் அங்கீகாரம் பெறப்பட்டுள் ளதுடன் அமைச்சின் பிரதான அலுவலகத்திற்குரிய இலங்கை வங்கியின் இலக்கம் 7040101 கணக்கில், கலாசார அலுவலக்கள் பிரிவிற்குரிய தாக காணப்பட்ட இலங்கை வங்கியின் இலக்கம் 7040782 என்ற உத்தியோகபூர்வ வங்கி கணக்கிற்கு நிதியினை மாற்றுதல் செயற்திறனாகவும் மற்றும் விரைவாகவும் நிதி முகாமைத்துவம் மேற்கொள் ளப்பட்டதாக அறிவிக்கப்பட் டுள்ளது. | ருந்த போதிலும் அது பிழையான தாக இருந்ததுடன் 2015 ஒக்டோபர் 23 ஆந் திகதிய இலக்கம 03/2015 என்ற திறைசேரி செயற் பாடுகள் சுற்றறிக்கையின் 02.1 ஆம் பந்தியின் பிரகாரம் புதிய வங்கிக் கணக்கு திறப்பதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் ஒதுக்கீட்டு சட்டத்தின் கீழ் செலவினத் தலைப்பில் அங்கீகரிக்கப்பட்டுளள சகல அமைச்சுக்களினாலும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் 101 செலவினத் தலைப்பின் கீழ் உள்ள புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் ஆலோசனையின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்காக ஒட்டுமொத்த அமைச்சினதும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இணைத்தலின் வசதிகளுக்காக மாத்திரம் (Binding) தனித்தனியாக 03 பகுதிகளாக இணைக்கப் | அமைச்சிற்காக ஒரு செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் ஒரு பெறுகைத் திட்டம் தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சிற்காக ஒரு வருட செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் ஒரு பெறுகைத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் புத்தசாசன பிரிவு, கலாசாரப் பிரிவு மற்றும் மரபுரிமைப் பிரிவிற்காக தனித்தனியாக 03 வருடாந்த பெறுகைத் திட்டங்கள் மற்றும் 03 செயல் நடவடிக்கைத் திட்டங்கள் தயாரித்து அமைச்சு செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிந்தது. | பட்டுள்ளதாகவும் ஒன்றிணைந்த பெறுகைத் திட்டம் ஒன்று 2026 ஆம் ஆண்டு முதல் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளின் பட்டியல் ஒன்று தயாரிக்க வேண்டிய பிரதான பெறுகைத் திட்டம் ஒன்று அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டின் போது பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்கான காலத்திற்கு பெறுகைத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 101-2-5-44-1409 செலவின விடயத்தின் கீழ் கலை கலாசார முகாம்கள் இரண்டை நடாத்துவதற்காக ரூபா 3.3 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 0.64 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டு அந்த கலாசார முகாம்கள் இரண்டும் நடாத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக உரிய ஆய்வினை உடைய மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதில் தேசிய மரபுரிமைப் பிரிவில் இருந்து கிடைக்கப் பெற்ற பின்னர் சமர்ப்பிக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய ஆய்வுடன் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | கிராமேதய ஜனகலா கேந்திர நிலையத்தை ஸ்தாபிக்கும் நோக்கமான சம்பிரதாய பழக்க வழக்கங்கள் மற்றும் பாரம்பரிய மரபுரிமைகளை இனங்காணல் மற்றும் பாதுகாத்தல் அந்த | பதில் தேசிய மரபுரிமைப் பிரிவில் இருந்து கிடைக்கப் பெற்ற பின்னர் சமர்ப்பிக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இயலுமான வகையில் உரிய ஆய்வினை |

| | | | |
|---|---|---|---|
| | மரபுரிமைகள் எதிர்கால பரம்பரை யினருக்கு வழங்குதல் தேவையை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் மரபுரிமையை அடிப்படையாக வலுப்படுத்துதல் மற்றும் அவற்றில் ஈடுபட்டிருக்கின்ற கலைஞர்களின் விருப்பத்தை பெறல் மற்றும் பழைமையான மரபுரிமைகள் தொடர்பாக உலகத்திற்கு அறிவித்தல் போன்ற நோக்கங் களை அடைந்து கொள்வதற்கு போதியளவான நிகழ்ச்சித்திட்டம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | உடைய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்குவதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கந்த உடரட்ட மரபுரிமையைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்குரிய செயற்திட்டத்தை இனங்காணல் மற்றும் திட்டமிடலைத் தொடர்புபடுத்துதல் மற்றும் அமுல்படுத்துதல் சம்பிரதாய மலைநாட்டு கிராமிய பொருளாதாரத்தில் கணிசமான பங்களிப்பை வழங்குகின்ற கிராமிய குளங்கள் மற்றும் நீர்ப்பாசனை முறைமைகளைக் கட்டி யெழுப்புதல், சம்பபிரதாய பழைய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சந்தையின் சந்தர்ப்பங்களை விரிவுபடுத் துதல் மற்றும் அந்தக் கைத்தொழில் களைப் பாதுகாத்தல் மேம்படுத் துதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவ தற்காக மலைநாட்டு மரபுரிமை அடிப்படையை ஸ்தாபிக் கப்பட்டிருந்த போதிலும் அதற்காக போதியளவான நிகழ்ச்சித்திட்டம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | பதில் தேசிய மரபுரிமைப் பிரிவில் இருந்து கிடைக்கப் பெற்ற பின்னர் சமர்ப்பிக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய ஆய்வினை மேற் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திருத்தப்பட்ட செயல் நடவடிக் கைத் திட்டத்தின் பிரகாரம் 101-2-5-44-1409 செலவின விடயத் தின் கீழ் ஆதிவாசிகளின் கிராமங்களுக்கு சமூகத்தினைத் தொடர்புபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல், தேசிய மரபுரிமைகளுக்கான ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்புக் குழுக்களை நடாத்திச் செல்வதற்காக முறையே ரூபா 1.7 மில்லியன் மற்றும் ரூபா 0.3 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப் பட்டிருந்த போதிலும் ஆண்டில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பதில் தேசிய மரபுரிமைப் பிரிவில் இருந்து கிடைக்கப் பெற்ற பின்னர் சமர்ப்பிக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உரிய பணிகள் ஆண்டில் மேற் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | கிராமோதய ஜனகலா கேந்திர நிலையம் மூலம் 2024 ஆம் ஆண்டில் ரூபா 250,000 நிதி ஏற்பாட்டில் மூர்த்தி நிர்மாணம் தொடர்பான புதிய பாடநெறி ஒன்றை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப் பட்டிருந்த போதிலும் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பதில் தேசிய மரபுரிமைப் பிரிவில் இருந்து கிடைத்த பின்னர் சமர்ப்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உரிய பணிகள் ஆண்டில் மேற் கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 101-2-5-037-2104 செலவின விடயத்தின் கீழ் அமரதேவ அசப்புவ நிர்மாணத்திற்காக ரூபா 38.69 மில்லியன் வருடாந்த நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 17.351 மில்லியன் பணிகள் மாத்திரம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருந்தது. மேலும் இந்த அசப்புவயின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்து செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படா திருந்த போதிலும் அதன் தேவையான பணிகளை நிறை | டபிள்யூ.டீ. அமரதேவ அசப்புவ நிர்மாணிக்கும் போது சில கொள்வனவுக ளுக்காக பல தடவை பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தமை, சில பொருட்கள் நிர்மாண கட்டிடத்திற்கு கையளிப்பதற்கு நீண்ட காலம் எடுத்தமை போன்ற விடயங்களின் காரணமாக நிதி ஏற்பாடு குறித்துரைத்த கால எல்லையில் பயன்படுத் | ஒதுக்கப்பட்டிருந்த த நிதி ஏற்பாடு உரிய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேற்றுவதற்காக 101-2-5-037-1509 செலவின விடயத்தின் கீழ் ரூபா 5 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப் படாமையின் காரணமாக அந்த நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | துதல் வரையறுக்கப்பட்டதா கவும், அமரதேவ அழகியற் கலை மற்றும் ஆராய்ச்சி கேந்திர செயற்திட்டத்தின் பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு, டபிள்யூ.டீ. அமரதேவ அசப்புவ நிறுவனமாக ஸ்தாபிக்கப்படா மையினால் செலவினங்கள் ஏற்படாதிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | அமைச்சு நடாத்திச் செல்கின்ற தஹம் பாய கட்டிடத்தின் கூரையில் சூரிய கள பெனலைப் பொருத்து வதற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 14,200,000 ஒதுக்கப்பட்டு உரிய விண்ணப்பப்பத்திரத்திற்காக இலங்கை மின்சார சபைக்கு ரூபா 8,500 மற்றும் பத்திரிகை அறிவித்தலை பிரசுரிப்பதற்காக ரூபா 178,416 ஆக ரூபா 196,916 செலவிடப்பட்டிருந்ததுடன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உத்தேசிக்கப்பட்ட கூரையில் சூரிய கள வலு முறைமை யினை பொருத்துவதற்கு முன் கூரையினை பழுதுபார்க் கவேண்டியிருந்ததாக எழுந்திருந்த தொழில்நுட்ப பரிந்துரையின் அடிப்படையில் கூரை (slab) பழுதுபார்ப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டியிருந்ததுடன் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதி ஏற்பாட்டிற்காக கோருவதற்கு முன் அதற்காக பொருத்தமான சுற்றாடல் ஒன்று காணப்படுகின்ற தான ஆய்வு செய்து மேற் கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | அமைச்சிற்குரிய சகல திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் மென்பொருள் அபிவிருத்திக்காக ரூபா 35,000,000 மூலதன நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட் டிருந்த போதிலும் அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,600,000 முஸ்லிம், சமய மற்றம் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப் பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக மென்பொருள் அபிவிருத்திற்கு உரித்தற்ற திரிபீடத்தின் மஹாவக்க பாளி கேந்திர கிரந்த ஆங்கில மொழி பெயர்ப்பு மற்றும் அச்சிடலுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகையில் ரூபா 184,797 செலவிடப்பட்டிருந்த | அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள சகல திணைக்களங் களினதும் மென்பொருள் அபிவிருத்திக்கு இந்த நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உரிய திணைக் களங்களிலிருந்து அதற்கான கோரிக்கை சமர்ப்பிக்கப்படா மையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக அறிவிக் கப்பட்டுள்ளது. | அமைச்சினால் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் தொடர்பாக சரியான ஆய்வினை மேற் கொண்டு ஒதுக்கப்படுகின்ற நிதி ஏற்பாடு உரிய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்துவதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | துடன் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட தொகை எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டி ருக்கவில்லை. | | |
